சுருக்கம்

கலையும் பண்பாடும் – விருதுகள் – தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழி விருது வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (நிலை) எண். 32

நாள்: 04–03–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், மாசி 20

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண் 31, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 28.02.2019.
2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளர் கடித எண் 566/அ5/2019, நாள் 04.03.2019

********

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான எட்டு ஆண்டுகளுக்கான பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த சிறந்த புகழ்பெற்ற இருநூற்று ஒன்று கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள், 2016 முதல் 2018 வரையிலான ஆண்டுகளுக்கு இயல், இசை, நாட்டியத் துறையில் சிறந்து விளங்கும் ஒன்பது கலைஞர்களுக்கு முறையே பாரதி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி ஆகியோர்களின் பெயரில் தலா மூன்று அகில இந்திய அளவிலான விருதுகள், மூன்று சிறந்த கலை நிறுவனங்களுக்கு விருது மற்றும் ஒரு சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற்கேடயம் ஆகியவற்றிற்கான பெயர் பட்டியல்களுக்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளதன் அடிப்படையில், கீழே அட்டவணையில் தெரிவித்துள்ள வறிய நிலையில் வாழும் எட்டு மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.25,000/– தொகைக்கான பொற்கிழி விருது வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

ரூ.25,000/– பொற்கிழி பெறும் விருதாளர்களின் பெயர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1 | கலைமாமணி புலவர் சு. கந்தசாமி பிள்ளை | சமயச் சொற்பொழிவாளர் |
| 2 | கலைமாமணி டி.எஸ். சிவப்பிரகாஷ் | அமெச்சூர் நாடக நடிகர் |
| 3 | கலைமாமணி டைப்பிஸ்ட் கோபு | நாடக நடிகர் |

| | | |
|---|---|---|
| 4 | கலைமாமணி எம். பிச்சையப்பா | காவடியாட்டக் கலைஞர் |
| 5 | கலைமாமணி வி.ஆர். திலகம் | பழம்பெரும் திரைப்பட நடிகை |
| 6 | கலைமாமணி<br>அம்மாபேட்டை கிருஷ்ணமூர்த்தி | ஆர்மோனியக் கலைஞர் |
| 7 | கலைமாமணி சுப்பிரமணியத் தம்பிரார் | தெருக்கூத்துக் கலைஞர் |
| 8 | கலைமாமணி பி.காந்திமதி | வில்லிசைக் கலைஞர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை 28.
உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை–28.
ஆணையர்(மு.கூ.பொ.), கலை பண்பாட்டுத்துறை, சென்னை–8.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (G&SSA/E&RSA/A&E), சென்னை – 18
உள்ளுறை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை – 9
நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை –9
முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் – 1, சென்னை – 9
நிதி (கல்வி–II./ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை– 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (பண்–1 / பொது–2) துறை, சென்னை– 9
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

04/03/19
பிரிவு அலுவலர்